**செய்தி வெளியீடு எண்: 570** **நாள்:04.09.2019**

**<u>செய்தி வெளியீடு</u>**

சவூதி அரேபிய அமைச்சகத்தின் பல்வேறு அரசு மருத்துவமனைகளில் பணிபுரிவதற்கு மூன்று வருட பணி அனுபவத்துடன் 35 வயதிற்க்குட்பட்ட பி.எஸ்.சி/எம்.எஸ்.சி/பி.எச்டி தேர்ச்சி பெற்ற பெண் செவிலியர்களுக்கான நேர்முகத் தேர்வு 24.09.2019 முதல் 25.09.2019 வரை மும்பையிலும் 27.09.2019 முதல் 29.09.2019 வரை புது டெல்லியிலும், 01.10.2019 முதல் 02.10.2019 வரை சென்னையிலும், 04.10.2019 முதல் 05.10.2019 வரை கொச்சியிலும் நடைபெற உள்ளது.

தேர்ந்தெடுக்கப்படும் எம்.எஸ்.சி செவிலியர்களுக்கு ரூ.90,000/- முதல் ரூ.1,10,000/- மற்றும் பி.எஸ்.சி செவிலியர்களுக்கு ரூ.80,000/- முதல் ரூ.1,00,000/- வரை மாத ஊதியத்துடன் இலவச விமான டிக்கெட், விசா, இருப்பிடம், உணவு, போக்குவரத்து, மருத்துவச் சலுகை, 30 நாட்கள் சம்பளத்துடன் கூடிய வருடாந்திர விடுப்பு மற்றும் சவூதி அரேபிய அமைச்சகத்தின் சட்டத்திட்டத்திற்க்குட்பட்ட இதர சலுகைகள் வழங்கப்படும்.

எனவே தகுதியுள்ள செவிலியர்கள் தங்களின் சுய விவரங்கள் அடங்கிய விண்ணபத்துடன் கல்வி மற்றும் அனுபவச்சான்றிதழ், பாஸ்போர்ட் ஆகியவற்றின் நகல்கள் மற்றும் வெள்ளைநிறப் பின்னணியில் எடுக்கப்பட்ட புகைப்படத்துடன் **ovemclmohsa2018@gmail.com** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 11.09.2019-க்குள் அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் ஊதியம் மற்றும் பணிவிவரங்களை அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவன வலைதளம் **www.omcmanpower.com** மற்றும் 044-22505886/ 22500417 / 8220634389 என்ற தொலைபேசி எண்களின் வாயிலாக அறிந்து கொள்ளலாம்.

இந்திய அரசின் வெளிநாடுவாழ் இந்தியர்களுக்கான விவகார அமைச்சகத்தால் வழங்கப்பட்ட அயல்நாட்டு நிறுவனத்தின் முகவர் எண் Rc.No.B-0821/CHENNAI/CORP/1000+/5/308/84, ஆகும்.

**தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்**
**அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**